பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 02 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

**தலைப்புச் செய்திகள்**

1. அஸ்ஸாம் மாநிலம், குவாஹாத்தியில் 5 ஆயிரத்து 450 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

2. இந்தியா - அரபு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

3. தொழில், ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோர் மாநாட்டை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

4. இமாச்சலப்பிரதேசத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான காலக்கெடுவை உச்சநீதிமன்றம் நீட்டித்துள்ளது.

5. வடமாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

அஸ்ஸாம் மாநிலம், குவாஹாத்தியில் 5 ஆயிரத்து 450 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

திப்ருகர் மாவட்டத்தில் அவசர காலங்களில் விமானங்கள் தரையிறங்க ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலையில், பிரதமர் இன்று காலை தரையிறங்குகிறார்.

பின்னர், அங்கு நடைபெறும் போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சியையும் அவர் பார்வையிடுகிறார்.

இந்திய விமானப் படையின் ஒத்துழைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தேசிய நெடுஞ்சாலை, வடகிழக்கு இந்தியாவில் முதலாவது அவசரகால விமான தரையிறக்கு தளமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*பின்னர், குவஹாத்தி செல்லும் பிரதமர், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தின் தற்காலிக வளாக கட்டிடத்தை திறந்து வைக்கிறார்.*

*இதனையடுத்து, Kamrup மாவட்டத்தில் வடகிழக்கு பிராந்தியத்திற்கான தேசிய தரவு மையத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.*

*பிரதமரின் மின்சாரப் பேருந்து சேவை திட்டத்தின் கீழ், நான்கு நகரங்களுடன் இணைக்கும் வகையில், 225 மின்சார பேருந்து சேவைகளையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.*

*பின்னர் அவர், வாக்குச்சாவடி நிலையிலான பிஜேபி தொண்டர்களிடையே திரு. நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.*

*அஸ்ஸாமில் பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு இன்றிரவு பிரதமர் புதுதில்லி திரும்பவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

>>>>><<<<<

*இந்தியா - அரபு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இருநாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையிலான ஆலோசனை ஆக்கபூர்வமாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இதற்காக பணியாற்றிய இந்திய தூதரக அதிகாரிகளுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.*

*இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் பயனளிக்கும் துறைகளில் இணைந்து செயல்படுவது என ஒப்புக் கொள்ளப்பட்டதாக திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்*

>>>>><<<<<

*தொழில், ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோர் மாநாட்டை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார்.*

இந்த இரண்டு நாள் மாநாட்டில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் புத்தொழில் நிறுவனங்களுக்கு உத்வேகம் அளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தொழில்துறை நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

>>>>><<<<<

பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் வேளாண் சார்ந்த திட்டங்களை மேற்கொள்வதில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற ஐ.நா மேம்பாட்டு திட்டம் மற்றும் தனியார் அறக்கட்டளை இணைந்து நடத்திய பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு குறித்த மாநாட்டில், வேளாண் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய வேளாண் துறை செயலாளர் திரு. *Devesh Chaturvedi*, விவசாயிகளுக்கான கடன் அட்டைகள், பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்வதில், நிலவள வங்கிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தன்தானிய வேளாண் திட்டத்தின் கீழ் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்துவது குறித்து, அரசு அதிகாரிகள், நிதி நிறுவனங்கள், பெருநிறுவனங்களின் தலைவர்கள், வேளாண் உற்பத்தி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை இந்த மாநாடு ஒன்றிணைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் கல்விக்கான சூழல் அமைப்பில் பொறுப்புணவுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வளர்ச்சியை உறுதி செய்வதில் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொடர்பான இரண்டு நாள் மாநாட்டில், பள்ளிக் கல்வி குறிப்பாக, அடிப்படைக் கல்வி குறித்தும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இம்மாநாட்டில், கொள்கை வகுப்பாளர்கள், மாநில அரசு அதிகாரிகள், ஆய்வாளர்கள், அறக்கட்டளை நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

அதிகாரப்பூர்வமாக சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் திரு. இந்தர்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் தேசிய புள்ளியியல் அகாடமியின் 18வது நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், சிறந்த நிர்வாகம் மற்றும் வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதில், தரமான புள்ளியியல் விவரங்களின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு, கொள்கைகளை வகுப்பது, திட்ட அமலாக்கம் மற்றும் மதிப்பீடு போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு புள்ளியியல் தரவுகள் உதவிடும் என்று அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

அமெரிக்காவின், வடக்கு கொலராடோ மாகாணம் அருகே, நேரிட்ட விமான விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்த சிறிய ரக விமானம், மலைப்பாங்கான பகுதியில் செல்லும்போது எதிர்பாராதவிதமாக விபத்து நேரிட்டதாக அந்நாட்டு தேசிய போக்குவரத்துக்கான பாதுகாப்பு வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அந்த வாரியம் மேல் கூறியுள்ளது.

>>>>><<<<<

கடற்படையில், சுயசார்பு நிலையை அடைய வேண்டியதன் அவசியம் குறித்து கடற்படை படைக்கலப் பிரிவு தலைமை இயக்குநர் திரு. திவாகர் ஜெயந்த் வலியுறுத்தியுள்ளார்.

உத்ராகண்ட் மாநிலம், Mossoorie-யில் உள்ள தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனத்தில் நடைபெற்ற வருடாந்திர உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

*கடல்சார் பாதுகாப்பில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில், நீடித்த மற்றும் புதுமையான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று திரு. திவாகர் ஜெயந்த் கேட்டுக் கொண்டார்.*

>>>>><<<<<

*விண்வெளித் துறையில் பிற நாடுகளுக்கு இணையாக இந்தியா விரைவான வளர்ச்சி கண்டு வரும் நாடாக உருவெடுத்து வருவதாக முன்னாள் இஸ்ரோ தலைவர் திரு. கிரண் குமார் தெரிவித்துள்ளார்.*

*நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொலைத்தொடர்பு, வானிலை போன்ற பல்வேறு தேவைகளுக்கு விண்வெளி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வந்த தாகவும், தற்போது வேளாண் மற்றும் எல்லைப்புற கண்காணிப்பு பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.*

*தற்போது, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வர்த்தக ரீதியிலான செயற்கைக் கோள்களை அனுப்புவதற்கான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*புவிசார் அரசியல் சூழலில், ராணுவம் உள்ளிட்ட துறைகளில் தற்சார்பு நிலையை எட்ட வேண்டும் என்ற முனைப்புடன் இஸ்ரோ பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு. கிரண் குமார் கூறினார்.*

>>>>><<<<<

*இமாச்சலப்பிரதேசத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான காலக்கெடுவை வரும் மே மாதம் 31ஆம் தேதிவரை நீட்டித்து. உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் மற்றும் நீதிபதி திரு. Joymalya Bagchi அமர்வு, மறுசீரமைப்பு, தொகுதி மறுவரையறை மற்றும் இடஒதுக்கீடு தொடர்பான பணிகளை மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.*

மாநில தேர்தல் அதிகாரிகளின் போக்குவரத்து சார்ந்த இடர்பாடுகள் மற்றும் மலைப்பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைப்பதில் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக உச்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

வடமாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப் பிரதேசத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கர்நாடக கடலோரப் பகுதிகள், கொங்கன் மற்றும் கோவாவில் மிதமான வெப்பநிலை நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டின் மத்தியப் பகுதி மற்றும் வடமேற்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலையில் எவ்வித மாற்றமும் இருக்காது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

அபுதாபி மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.

30 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஆடவர் Hammer Throw போட்டியில், இந்தியாவின் கிஷோராகுமார் சந்திர மோகன் தங்கப்பதக்கம் வென்றார்.

இதேபோட்டியில் இந்தியாவின் முகமது அன்சார் வெண்கலப் பதக்கம் வெ

>>>>><<<<<

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணியின் கேப்டனாக ரியான் பராக் நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>>END<<<<<